# இளையோரின் பார்வையில் பாடுகள்

**முன்னுரை:**

பிரியமானவர்களே,

இந்த ஆண்டை இளையோர் ஆண்டாக கொண்டாட அழைப்பு பெற்றிருக்கும் நாம் பாடுகளின் காலத்தில், இளைஞராக இருந்து, கொள்கையோடு வாழ்ந்து, பிறருக்காக, குறிப்பாக தன் நண்பர்களுக்காக இன்னுயிரை ஈந்த எம் பெருமான் இயேசுவின் பாடுகளின் பாதை சொல்லும் விழுமியங்களை சிந்திக்க அழைக்கின்றோம்.

இவருடைய பிறப்பே அர்த்தமுள்ளது. மனித நிலைக்கு தன்னை தாழ்த்தி, கடவுளின் மகன் என்ற நிலையில் அல்லாமல், சிலுவை சாவையேற்று, மானுடம் மறுவாழ்வு பெற வேண்டும் என்ற உன்னத உயர்ந்த கொள்கைக்காக தன்னுயிரை மனமுவந்து கொடுத்தார் இறைஞனாய் இருந்த போதே.

நம்முடைய பிறப்பும் அர்த்தமுள்ளது தான். நாமும் நல்ல நோக்கத்துடனே படைக்கப்பட்டு உள்ளோம். படைத்த இறைவன் அதனாலேயே 'நல்லது என கண்டார், மனிதனை படைத்த பின்னரும்' என விவிலியம் கூறுகின்றது.

ஏனெனில் நாம் கடவுளின் கைவேலைப்பாடு . நற்செயல்கள் புரிவதற்கென்றே கிறிஸ்து இயேசு வழியாய்ப் படைக்கப்பட்டிருக்கிறோம். இவ்வாறு நற்செயல்கள் புரிந்து வாழும்படி கடவுள் முன்கூட்டியே ஏற்பாடு செய்திருக்கிறார். எபேசி 02:10

என்றும் இளமையாய் வாழ்ந்து வர இயேசுவின் விழுமியங்கள் சொல்லிக் காட்டும் பாடங்களை சிந்தித்து, வாழ்வாக்க இந்த வழிபாடு உதவ இணைந்து செபிப்போம்.

**செபிப்போம்:**

ஆவியானவரே, அன்று பணியை தொடங்குவதற்கு முன்னர் இயேசுவின் மீது தங்கி வல்லமையாய் செயல்பட்டது போல இந்த பயணத்திலே பங்கெடுக்கும் எம்மீதும் தங்கி, நல்லவைகளை கண்டு போற்றி, எமதாக்கி சாட்சியாய் வாழ்விலே வாழ்ந்து எம் பிறப்பையும் அர்த்தமுள்ளதாக்க வரம் தாரும்.

## முதலாம் நிலை

## பிலாத்து முன்னிலையில் இயேசு

குற்றமற்றவராக இருந்த போதிலும் உம்மையே தாழ்த்தி, அவர்களின் குற்றசாட்டுக்களுக்கு உம்மை ஒப்புக் கொடுத்து எங்களுக்கு என்ன கற்றுக் கொடுக்கின்றீர்?

வாழ்விலே பல நேரங்களில் குற்றமற்ற மனிதர்கள் குற்றவாளிகளாக்கப்படுகின்றார்கள். ஏவுகின்றவர்கள் யாரோ, ஆனால் மாட்டிக் கொள்வதோ அம்பு தான். நொறுக்கப்படுவதுவும் அம்புத் தான். இரத்தத்தை பார்ப்பதுவும் அம்புத் தான்.

யாரோ இயக்கி, இடைத் தரகராக யாரோ இருந்து செயல்பட்டு, இன்றைக்கு சாதாரண வேலையின்றி தவிக்கும் இளையவர்கள், படித்துக் கொண்டு இருக்கும் அன்பர்கள், துடிப்போடு எதையாவது சாதிக்க நினைப்பவர்கள், திக்கு தேடி அலைபவர்கள் பயன்படுத்தப்பட்டு வாழ்வையே இழந்து போகின்ற நிலை இன்றும் தொடர் கதையாகிப் போனகின்றது என்பதுவே உண்மை.

எல்லா குற்றச் செயல்களிலும் இன்றைக்கு பிடிபடுவது என்னமோ இளையவர்கள் தான். உண்மை குற்றவாளிகள் இவர்கள் தானோ? உள்ளே இருப்பவர்கள் எல்லாரும் குற்றவாளிகள் இல்லை, வெளியே நடமாடுபவர்கள் எல்லாரும் புத்தரும் காந்தியும் இல்லை என்ற பாடலின் வரிகளே நினைவுக்கு வருகின்றது.

இளமையில் நம்மை இயக்குவது யார்? எந்த கொள்கை இயக்குகின்றது என்பதிலே கவனம் கொள்வது நல்லது. நிதானமாக ஆலோசித்து, யோசித்து இதனால் நான் வாழ்வு பெறுவேனா என்று கேட்டுப் பார்த்து வாழ்வை தீர்மானிப்பது அறிவுடைமையாகும்.

**செபிப்போம்:**

இறைவா உம் ஆவியை தாரும். திக்கு தெரியாது அலையும் எம் மனத்தில் உம் ஆவியை குடியிருக்கச் செய்து, நாங்கள் அலைக்கழிக்கப்படுகின்றோமா? பயன்படுத்தப்படுகின்றோமா? என்பதை தெளிவுபடுத்தி சரியான பாதையில் நடந்திட வரம் தாரும்.

## இரண்டாம் நிலை

## பாரமான சிலுவை இயேசுவின் தோள் மீது

மக்களின் பாவங்களை, குற்றங்களை நீர் உம்மீது பாரமான சிலுவையாக சுமந்து கொண்டு குற்றவாளியாக கருதப்பட முன் வந்தது எதனால்?

இளையவர்கள் எப்பொழுதுமே பிறருடைய சுமைகளை தாங்கிக் கொள்ளும் இதயம் பெற்றவர்கள். யார் எவர் என்று பாராமல் இளையவர்கள் எப்பொழுதுமே மற்றவர்களின் சுமைகளை பகிர்ந்து கொள்ள முன்வருபவர்கள். இத்தகைய மனநிலையை நீரும் கொண்டு இருந்தீர் என்பதனை எமக்கு வெளிக்காட்டுகின்றீர்.

பவுலடிகளாரும் இதனையே தன்னுடைய மடல்களில் வெளிப்படுத்துகின்றார். திருச்சபை என்னும் பெரிய குடும்பத்தில் நாம் ஆற்ற வேண்டிய பணி பிறரது சுமைகளை தாங்கிக் கொள்ள முன்வர வேண்டும். கலா 6:2 ஒருவர் மற்றவருடைய சுமைகளைத் தாங்கிக் கொள்ளுங்கள். மற்றவர்களுடைய குறைகளை அறிய முன்வரும் போது, பொறுமையோடு அவர்களை பரிவுடனே திருத்த கடமைப்பட்டவர்கள். இது நாம் செய்ய வேண்டிய திருப்பணியாகும் என்கிறார். (2கொரி 2: 5-11)

லேவி 19: 17 உன் சகோதரரை உள்ளத்தில் பகைக்காதே! உனக்கடுத்தவர் பாவம் செய்யாதபடி அவரைக் கடிந்து கொள். என்ற இறைவாக்கின்படி எங்களது பாவங்களை எல்லாம் உம் மேல் சுமந்து கொண்டு எங்களுக்காக நீர் குற்றவாளியாக முன்வந்தீர் என்பதனை நாங்களும் உணர்ந்து கொள்ள செய்து இருக்கின்றீர்.

பிறரை குறற்வாளி என தீர்ப்பிட்டு, அவர்களது மேல் களங்கத்தை ஏற்படுத்தும் அவச் செயலை செய்யாது, அவர்களது பாவச் சுமையை இறக்கி வைக்க முன்வரும் போதே நாங்கள் உம்முடைய திருப்பணியைச் செய்கின்றோம் என்பதனை உணரச் செய்தமைக்கு நன்றி!

**செபிப்போம்:**

இறைவா! குற்றப்படுத்துவதும், குற்றத்தை குறைகளை பெரிதுபடுத்துவதும் உம் செயல் அல்ல. மாறாக மற்றவர்கள் தங்களது பாவத்திலேயே தொலைந்து போகாமல், அவர்களது சுமைகளை இறக்கி வைக்கும் சுமை தாங்கிகளாக வாழ்வதுவே உம் திருப்பணி என்பதை உணர்ந்து நடந்து கொள்ள புதிய இதயம் தாரும்.

## மூன்றாம் நிலை

## முதல் தடுமாற்றம்

பாரமான சிலுவை, தளர்ந்த மனம், அவமானகரமான பயணம் இவையெல்லாம் அழுத்த, பயணத்தில் ஒரு தடுமாற்றம். இது இயற்கையானது என்றாலும், எமக்கு சொல்லும் பாடம் தான் என்ன?

இளமையான வாழ்வில் அடியெடுத்து பயணிக்க முற்படும் போது கவர்ச்சி, போதை, புகை என எதிலாவது நாங்கள் தடுமாற்றத்தை காண நேரிடுகின்றது. இதெல்லாம் இயற்கைத் தானே. யார் இதில் தடுமாற்றம் காணாது போகிறார்கள்?

இளமை வாழ்வு என்பது அற்புதமானது, ஆற்றல் பெற்றது என்பது உண்மையென்றாலும், எம்மை பெற்றவர்கள் எம்மைக் குறித்து பயப்படுகின்ற காரியம் - எங்களது தடுமாற்றம் இயற்கையென்றாலும், அவர்களும் அதனை கடந்து வந்தவர்கள் என்றாலும், நாங்கள் அந்த தடுமாற்றத்தில் விழுந்து எழ இயலாது போவோமா என்பது தான். அவர்களது பயத்திலும் அர்த்தம் இல்லாது போகவில்லை.

இன்றைக்கு கவர்ச்சி, போதை, புகை போன்ற எதிலாவது இளைய சமூகம் விழுந்து போகின்றது. வளர்ச்சி முன்னேற்றம் என்று நாங்கள் கருதுகின்ற பல இதற்கு துணை போகின்றது என்பதையும் அறியாமல் இல்லை. கணனி, இணையதளம், கைப் பேசி, சின்னத்திரை, வெள்ளைத் திரை, ஏ அப்பப்பா எத்தனை எத்தனை. . .

தடுமாற்றம் இயற்கையானது தான். ஆனால் தடுமாற்றத்தை சாதகமாக்கி கொண்டு அதிலேயே சுகம் காண்பது மனிதமே இல்லையென உம்முடைய பயணம் சொல்லிக் காட்டுகின்றது.

பாரத்தால் தடுமாறினாலும், இலட்சியத்தை கண்முன் கொண்டு, பயணிக்க வேண்டிய தூரத்தை கண் முன் கொண்டு எழுந்து உதறிவிட்டு நடக்கின்றீரே, அது தான் உம்மை உயர்த்தியது. நீர் ஒரு இலட்சியவாதி என சொல்லி நிற்கின்றது.

**செபிப்போம்:**

இறைவா, தடுமாற்றம் எல்லாருக்கும் சொந்தமானது என்றாலும், நான் தடுமாற்றத்தை சந்திக்கின்ற போது, எம் பெற்றோரை கண்முன் கொண்டு இலட்சியத்தை நோக்கிய பயணத்தில் இன்னும் செல்ல வேண்டிய தூரம் அதிகம் என உணர்ந்து, உடனே எழுந்து நடக்க அருள்தாரும்.

## நான்காம் நிலை

## தாயின் சந்திப்பு சேய்க்கு தெம்பு

பாடுகளை கண்டு பயம் கொள்ளாது பயணிக்க, தெம்பூட்டும் பார்வையை தந்திட அன்னையின் சந்திப்பு உம் திட்டம் தானோ?

வாழ்வின் பயணத்தில் பெற்றோரின் துணை அற்புதமானது. கண்கண்ட தெய்வங்களாக எம்முடனே பயணிப்பவர்கள் அவர்கள் தான். உம்மை விசுவாசத்திலே எமக்கு அறிமுகப்படுத்தியவர்களும் அவர்களே. இன்றைக்கு எங்களை படைத்து தரணியிலே வாழச் செய்ய உடன்படைப்பாளிகளாக அவர்களையே நீர் பயன்படுத்திக் கொண்டீர் என்பதனையும் அறிகின்றோம்.

வயதுக்கு வந்தவர்கள் நாங்கள், எங்களுக்கு எல்லாம் தெரியும், யாரும் எங்களுக்கு எதுவும் சொல்ல தேவையில்லை, உங்களுக்கு நாங்கள் அடிமைகள் அல்ல, என்று சொல்லிப் பார்க்கின்ற வயது இந்த இளமைப் பருவம்.

தந்தையரின் கண்டிப்புரையை ஏற்பவர் விவேகமுள்ளவர் என்ற நீதி மொழிகளின் கூற்றையும் 15: 5, சொல்லாலும், செயலாலும் உங்களது பெற்றோரை மதியுங்கள் என்ற சீராக்கின் கூற்றையும் 3:8 எங்களுக்கு தந்தமைக்கு நன்றி.

பெற்றோரின் பார்வை சொல்லும் மொழி அற்புதமானது, அழகானது, அர்த்தமுள்ளது. பார்வையிலேயே எது சரி, எது தவறு என்பதனையும் பாராட்டா, வாழ்த்தா, அல்லது கண்டிப்பா என்று உணர்த்தும் அழகே தனியழகு தான்.

இந்த பெற்றோரின் பார்வையைப் புரிந்து கொள்ளாது, அதனை ஏற்க இயலாது நாங்கள் போகும் போதே பல நேரங்களில் எங்களுக்கும் அவர்களுக்கும் பார தூர இடைவெளி ஏற்படுகின்றது. அதுவே எங்களை மேலும் மேலும் குற்றச் செயல்களுக்கு இட்டுச் செல்லுகின்றது.

அன்றைக்கு உம்முடைய ஒரு பார்வையிலே இருந்த அர்த்தத்தை உணர்ந்த பேதுரு தன்னைத் திருத்திக் கொண்டதால் நீர் சொன்னபடியே திருச்சபையின் தலைவரானார் என்பதனை அறிகின்றோம்.

**செபிப்போம்:**

பெற்றோரின் பார்வை சொல்லும் அர்த்தத்தை உணர்ந்து, எங்களை எங்களது வாழ்வை நாங்கள் சீர் செய்து கொள்ளும் வரம் தாரும் இயேசுவே!

## ஐந்தாம் நிலை

## சீமோனின் உதவி

கடவுளின் குமாரர் என்ற நிலையிருந்த போதும், எல்லாம் வல்லவராக இருந்த போதிலும், எதையும் செய்ய ஆற்றல் பெற்றவராக இருந்த போதிலும், சாதாரண சீமோனின் உதவியைப் பெற்றுக் கொள்ள முன்வந்தது எதனால்?

மனிதர்கள் தனித் தீவாகிட முடியாது. காரணம் தனிமரம் தோப்பாகிட முடியாது. மனிதர் ஒரு சமூக விலங்கு. அவர் அடுத்தவரை சார்ந்தே வாழ்ந்திடல் வேண்டும்.

இளமையில் உள்ள உணர்வான, 'எல்லாம் என்னால் சாதித்திட முடியும், நான் யாரையும் சார்ந்து வாழ்ந்திடல் அவசியமில்லை' எனச் சொல்லி தன்னை தனிமைப்படுத்திக் கொள்ளும் மனநிலையை மாற்றிட தான் இந்த அழைப்பா?

சகோதரர்கள் ஒருமித்து வாழ்வது எவ்வளவு நல்லது, எவ்வளவு இனிமையானது என்ற தாவீது அரசரின் அறைக்கூவலும், எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக என்ற உம்முடைய வேண்டுதலும் சொல்லிக் காட்டுகின்ற பாடம் இதுதானோ?

மற்றவர்களின் திறமைகளையும், தனித்தன்மைகளையும் மதித்து ஏற்று பயணிக்க வேண்டும் என்று சொல்லாமல் சொல்லிக் காட்டியிருக்கின்றீரோ? இதற்கான தாழ்ச்சியைப் பெற்றுப் கொண்டாலேயே வாழ்வு சிறக்கும் என்பதுவும் உண்மைத் தான்.

'பணிவையே பெரிதும் நாடு' (சீராக் 7:17) என்ற இறைவாக்கு கற்றுக் கொடுக்கின்ற பாடத்தை ஏற்று, எங்கெல்லாம் மற்றவரின் உதவிப் பெற்று இயைந்துப் பணியாற்றிட முடியுமோ அங்கெல்லாம் உதவிகளைப் பெற்று பங்காளிகளாக மற்றவர்களையும் ஆக்கிக் கொள்வது பணியினை சுலபமாக்கும், அதுவே செயலினை சிறப்பானதாகவும் ஆக்கும்.

**செபிப்போம்:**

எல்லாம் வல்லவரானாலும், உதவி செய்ய முன்வருவோரையும், உதவி பெற்று வாழும் காலத்தையும் முறையாகப் பயன்படுத்தி, மற்றவர்களுடன் இயைந்து செல்லும் மனதினை எமக்குத் தாரும்.

## ஆறாம் நிலை

## பெண்ணின் வீரம்

கோரையான முகத்தோடும், இரத்தம் படிந்த உடலோடும், வீரர்கள் புடை சூழ செல்லும் பயணத்தில் இளம் பெண்ணின் அக்கறையோடு கூடிய தொடுகையை அனுமதித்து சொல்லும் செய்தி தான் என்ன?

ஓடும் பாம்பை மிதித்துப் போடும் வயது வாலிப வயது. எதையுமே துணிச்சலோடு செய்யத் துடிக்கும் வயது இளமையின் வயது. நல்லது எனக் கண்டால் பின் விளைவுகளை யோசிக்காது களத்தில் இறங்கும் மனோபாவம் இளமையின் வேகம்.

வீரர்கள் புடை சூழ வந்த போதிலும், வேடிக்கைப் பார்க்கும் கூட்டம் சூழ்ந்திருக்கும் போதும், பெண்ணினத்தை மதிக்காத மாமனிதர்கள் என்ற போர்வையில் வாழும் மனித மிருகங்கள் மத்தியிலும், தான் மதித்த மனிதருக்கு காயம், கோரம் என்று கண்ட பெண்மணி, துணிச்சலோடு தன்னால் ஆன உதவி அந்த நேரத்தில் இது தான் என எண்ணி, தான் வைத்த துணியைக் கொண்டு இயேசுவின் முகத்தை துடைத்து, தன் தொடுகையினால் ஆறுதல் கொடுத்து தேற்றுகின்றாள்.

நல்ல காரியங்களை செய்ய துணிச்சல் போதுமானது. அதனை நல்ல மனத்தோடு செய்யும் போது, யார் செய்ய முன் வந்தாலும் அதனை அனுமதிப்பது என்பது பாராட்டுக்குரியது. அதனையே வாய்ப்பு கிடைக்கும் போது நாமும் செய்ய முன்வருவது என்பது கிறிஸ்தவத்தின் படிப்பினை என்பதுவே இந்த பெண் நமக்கு உணர்த்தும் பாடமாகும்.

கடவுள் நமக்கு தந்தது கோழையுள்ளத்தினை அல்ல, மாறாக அன்பு, வல்லமை, கட்டுப்பாடு கொண்ட இதயத்தையே என பவுல் அடிகளார் தீமோத்தேயுவுக்கு கூறுகின்றார் 2தீமோ 1:7

**செபிப்போம்:**

இறைவா, நல்லது செய்ய அன்போடு கூடிய வல்லமையைப் பெற்று, கட்டுப்பாடு கொண்ட இதயத்துடனே காரியங்களை செய்து உம்முடைய சாட்சியாய் வாழும் வரம் தாரும்.

## ஏழாம் நிலை

## இரண்டாவது தடுமாற்றம்

பயணத்தின் பாதையில் இரண்டாவது தடுமாற்றம். பாதைகளில் இழுத்துச் செல்லப்பட கால்கள் தள்ளாடி, நீர் தடுமாறி இரண்டாம் முறையாக தரையை முத்தமிட்டீர் என சிந்திக்க எங்களை அழைக்கின்றீர்.

இளையவர்களின் வாழ்வில் காதல், புகை, மது என தடுமாற்றத்தை கண்டப் பின்னர், அதிலிருந்து மீண்டு வரும் போது அடுத்த கட்ட தடுமாற்றம் ஏற்படுவது நிறைய சம்பாதிக்க வேண்டும் என்ற மனோபாவம். இது அவர்களை அடிமைப்படுத்தி அந்த பணத்தை சம்பாதிக்க என்ன வேண்டுமானாலும் செய்ய தூண்டுகின்றது என்பதனை பார்க்கின்றோம்.

இத்தகைய மனோபாவத்திற்கு காரணமாக அமைவதுவே அவர்களது உதாரித்தனமான செலவீனங்களே. தாங்களும் பணமில்லாது நட்பு பாராட்ட முடியாது. பணமில்லையென்போமானால் மதிக்கமாட்டார்கள் என்ற கருத்து நிலவுவதால் அதிக பணத்தினை எதிர்பார்த்து பணமும், உடையும், உணவும் இவர்களுக்கு பெரிதாகப்படுகின்றது.

நண்பர்களுக்கு துரோகம் இழைப்பது, பெற்றவர்களை சபிப்பது, உடன்பிறந்தாருக்கு இடையூறு விளைவிப்பது என்ற பாவச் செயல்களுக்கு அடிமைப்பட்டு போய் தங்களது அமைதியை நிம்மதியை தொலைக்கின்றனர்.

இதற்கு காரணமாக அமைகின்ற எளிமையான வாழ்வு மட்டில் அவர்களிடம் இல்லாத தெளிவும், எளிமை என்பது ஏளனமான ஒன்று என்ற கருத்தும், வெளிப்புற வறட்டுத்தனமான கௌரவ வாழ்வும் தான் இத்தகைய பாவத்திற்கு இளையவர்களை அடிமைப்படுத்தி கீழே விழச் செய்கின்றது.

இறைவனது போதனையே, எளியவர்கள் பேறுபெற்றோர், ஏழைகளாய் வாழ்வோர் பேறுபெற்றோர் என்றே அமைந்துள்ளது. 'இறைப்பற்றில்லாதோரே வறுமை தீயது' என்பர் என வேதம் கூறுகின்றது. சீராக் 13: 24

**செபிப்போம்:**

இறைவா, பிறக்க இடமில்லாது மாடடை குடிலினில் பிறக்க முன்வந்தீர். அடக்கம் செய்ய கூட அயலானின் கல்லறையை தேர்ந்து கொண்டீர். உம்முடைய எளிமை உயர்வு தந்து வரலாற்றில் இடம் பெற்று விட்டீர். இதனை உணர்ந்து வாழும் வரம் தாரும் இயேசுவே.

## எட்டாம் நிலை

## மகளீரின் கண்ணீர்

பாடுகளின் பாதையில் மகளீர் படை சூழ்ந்து வருத்தம் தெரிவிக்க, அவர்களிடம், உங்களுக்காகவும், உங்களது குழந்தைகளுக்காகவும் அழுங்கள் எனச் சொல்லி அவர்களை சிந்திக்க செய்யும் நோக்கம் தான் என்ன?

படைப்பினிலே ஆணையும் பெண்ணையும் படைத்து நல்லது எனக் கண்ட நீர், இருவருக்கும் ஆற்றலையும், அறிவையும் தந்து சமத்துவமான சமூகத்தை படைத்து கொடுத்த நீர், இன்று காணும் சமூகமோ, பெண்ணை மதிக்காது, மரியாதையாய் நடத்தாது, போதையாகவும், சுமையாகவும், இழிவாகவும் கருதி வருவதனால், உங்களை எண்ணிப் பாருங்கள் என்று அழைத்தீரோ.

இன்றைக்கு பெண்களை சமமாக கருதி வாழும் வாழ்வை விடுத்து விட்டு, சமூகம் இது, பண்பாடு இது என்று பல காரணங்களை சொல்லி அடிமைச் சமூகமாகவே இருந்து வருகின்ற இந்த ஆண் ஆதிக்கச் சமூகம் என்றைக்கு தான் இதை உணரப் போகின்றது?

பெண்களிடமும் உணர்வு உண்டு. பெண்களிடமும் அறிவு உண்டு. ஆற்றல் பெற்றவர்கள் தான் அவர்கள் என உணாந்து ஏற்றுக் கொள்ளும் சமூகம் தான் நல்ல வளாச்சியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பெண்களே இன்றைக்கு தன்னை அடிமைப்படுத்துகின்ற ஆண் ஆதிக்க சமூகத்திற்கு ஏற்ப தங்களின் உணர்வுகளை புதைத்து, சக பெண்களையும், சிறப்பாக விடுதலை உணர்வுள்ள பெண்களை சகித்துக் கொள்ள முடியாது போனால், சமூகம் எத்தகைய வளர்ச்சியை பெற்றுக் கொள்ள முடியும்.

இத்தகைய சூழலில் அடிமைத்தனத்தை மாற்றி இறையாட்சிக்குரிய விழுமியத்தைக் கை கொண்டு ஒழுக நாம் சிந்திக்க அழைக்கப்படுகின்றோம்.

இதனையே பவுல் அடிகளார், "உங்களிடையே பால் இன வேறுபாடுகூட இருப்பது ஒன்றாய் வந்து திருவிருந்துண்ண தடையாகும்" என்றதும் சிந்திக்க கூடியதே.

**செபிப்போம்:**

இறைவா உம் விருப்பத்திற்கு ஏற்ப சமத்துவ சமூகம் படைக்க அருள்தாரும்.

## ஒன்பதாம் நிலை

## மூன்றாம் முறை தரையில்

எழுந்தாலும் நடந்தாலும் மறுமுறையும் விழுந்து, தொடர்ந்த தடுமாற்றம் பயணத்தில் உண்டு என்பதனை உணர்த்திக் காட்டுவதன் நோக்கம் தான் என்ன?

மூன்றாவது எண்ணிக்கைக்கு அல்ல, மாறாக தடுமாற்றம் வாழ்விலே பயணத்திலே தொடரத் தான் செய்யும், தளர்ச்சியடையாது, நமக்கு முன் தடுமாறியவர்கள் கரம் கொடுத்து தூக்கிவிட இருக்கும் போது அவர்களின் துணை பெற்று வாழ்விலே பயணிக்க முடியும் என்ற நம்பிக்கையைப் பெற்றுக் கொள்வது காலத்தின் கட்டாயம்.

இன்றைக்கு இளையவர்கள் பயணத்தில் எத்தனையோ தடுமாற்றங்களைச் சந்தித்து வருகின்றார்கள். அது ஒரு தொடர்கதையானாலும், சிந்திக்க வேண்டிய ஒன்று. தங்களது விசுவாசத்திலே ஏற்படுகின்ற தடுமாற்றம் இவர்களை பின்னடைவு அடையச் செய்கின்றது என்பதனை புரிந்து கொள்ளுதல் அவசியமானது.

கேள்விகள் கேட்கும் வயதுக்கு வரும் அவர்கள் தங்களது விசுவாசத்தையும், நடைமுறை நிகழ்வுகளோடு ஒப்பிட்டுப் பார்த்து கேள்வி கேட்டுப் பார்த்து விசுவாச தடுமாற்றத்தை சந்திக்கின்றார்கள். இதிலே அவர்களுக்கு தவறான மாதிரிகை காட்டப்படுகின்றது. போதிப்பது ஒன்று, நடைமுறை வேறொன்று. 'நான் எப்படியும் இருப்பேன், ஆனால் மற்றவர்கள் மாத்திரம் ஒழுக்கமாக இருக்க வேண்டும்' என்ற மனநிலை. இது போன்று தங்களை வழிநடத்த பொறுப்பேற்றுள்ள பெற்றோர், கல்வியாளர்கள், மத குருமார்கள், துறவிகள் என்பவர்கள் முரண்பட்ட தங்களது வாழ்வினால் காட்டும் துர்மாதிரிகை இத்தகைய இளையவர்களை தடுமாற்றம் காணச் செய்கின்றது என்பது உண்மைத் தான்.

“அவர்கள் சொல்லுவார்கள், செய்யமாட்டார்கள். அவர்கள் சொல்லுவதை மட்டும் ஏற்றுக் கொள்ளுங்கள், அவர்களைப் பார்த்து நடக்காதீர்கள்” என்ற இறைவார்த்தையை இளையவர்கள் கருத்தில் கொள்வது அவசியமானது.

விசுவாச தடுமாற்றத்தில் மற்றவர்கள் மாற வேண்டும் என கோராமல், தான் இத்தகைய முரண்பாடுகளை களைந்து, சொல்லும் செயலும் ஒத்த வாழ்வு வாழ்வது என எழுந்து நடப்பதுவே அறிவார்ந்த செயலாகும்.

**செபிப்போம்:** இறைவா இளையவர்களுக்கு நல்ல மாதிரிகையைக் காட்ட வரம் தாரும். விசுவாசத்தை எங்களிலே அதிகரித்தருளும் இறைவா.

## பத்தாம் நிலை

## ஆடைகள் அகற்றப்படுதல்

அவமானம் வாழ்விலே அகற்றப்பட இயலாத கறை என்பதனை உணர்ந்திருந்தும், உம்முடைய ஆடைகளை அகற்றி உம்மை அவமானப்படுத்திட முற்படும் கயவர்கள் முன்னிலையில் கையாலாகதவராக நிற்பதன் மர்மம் என்ன?

இளையவர்கள் தங்களது வாழ்விலே தங்களது தடுமாற்றங்களினால் அவமானத்தைப் பெற்று வருகிறார்கள் என்பது உண்மையானது. இவர்கள் அவமானப்படுவதோடு தங்களது பெற்றோர்களையும், உடன்பிறந்தாரையும், உறவுகளையும் அவமானப்படுத்துவது தான் வேதனைக்குரியது. இந்த கறை தேவையானது தானா? எதைக் கொண்டும் அகற்ற இயலாத இந்நிலை வாழ்வின் எதிர்காலத்தில் காணும் போது, வாழ்வு முழுவதையும் அழுகையாலே கழுவிக் கொள்ள முற்படுவதும் நாம் பார்க்கின்ற ஒன்றே.

ஆத்திரத்தில், அவசரத்தில், யோசிக்காமல், கலந்தாலோசிக்காமல், எடுத்தேன் கவிழ்த்தேன் என இளையோர் நடக்க முற்படும் போது கறைகளைப் பெற்றுக் கொள்கின்றார்கள். இந்த கறை இளைய வயதிலே வரக் கூடியது சகஜம் தானே என்று வேறு சொல்லி சமாளித்துக் கொள்வதாக நினைக்கின்றனர்.

இது இளையவர்களுக்கு சகஜமாக இருக்கலாம், ஆனால் இதனால் பாதிப்பு பெற்றவர்கள் உற்றவர்கள் என பெரிதும் பலரையும் பாதிக்கிறதே என இளையவர்கள் உணர்ந்திட முன்வருவது நல்லது. இந்த அவமானங்கள் இன்று கலாச்சாரத்தையும் பாதிக்கின்றது என்பது ஏனோ அறியப்படாத நிலையிலே உள்ளது. 'கட்டிக்கிட்டு ஓடுவது, பெற்றெடுத்து விட்டு கட்டிக் கொள்வது, பெற்றப் பின்னரும் கட்டிக் கொள்ளாமல் இருப்பது' என்பது பாட்டுக் சரியாக இருக்கலாம் ஆனால் வாழ்வுக்கும் நம்முடைய கலாச்சாரத்திற்கும் சரியாக வருமா என ஏன் யோசிக்காமல் இருக்கின்றோம்.

நம் சமூகத்தில் பெற்றவர்களுக்கு பிள்ளைகள் தரும் சந்தோஷமே அவர்களின் சம்மதத்துடனும் ஆசிருடனும் அமையும் திருமண வாழ்வு தான். சிரமமாக இருந்தாலும், சுமையாக இருந்தாலும், அதிலே உள்ள சுகமே தனித்தான் என்பதனை உணர்ந்திட முன்வருவது நல்லது.

**செபிப்போம்:** இறைவா! எமக்காக எம்முடைய பாவங்கள் உம்மை அவமானப்பட வைத்த போதும், எம் நல்வாழ்விற்காக ஏற்றுக் கொள்ள முன் வந்தீரே, நாங்கள் உறவுகளுக்கு எந்த சூழலிலும் அவமானத்தை கொடுக்கும் செயல்களை செய்யாது இருக்கும் அறிவைத் தாரும்.

## பதினொன்றாம் நிலை

## அறையப்படுதல்

நல்லதையே செய்ய நடந்த கால்கள், அள்ளிக் கொடுத்த கரங்கள் ஆணிகளால் அறையப்படுவதை எப்படி எடுத்துக் கொள்ள என்று எங்களுக்கு கற்றுக் கொடுக்கின்றீர்?

இளையவர்கள் கண்டிக்கப்படுவதை விரும்புவதில்லை. தன்னுடைய சுயம் பாதிக்கப்படுகின்றதோ என அவர்கள் எதிர்க்க முற்படுகின்றார்கள். கண்டிப்பு என்பது காட்டிற்கு போகிறவர் எடுத்துச் செல்கின்ற கைவிளக்கு போன்றது. இருட்டாய் உள்ள காட்டை அதன் அழகை அந்த கைவிளக்கு காட்டி விடுவதில்லை. மாறாக அடுத்த அடி அந்த காட்டினில் எடுத்து வைக்க மிகவும் உதவியாய் இருக்கும். வாழ்க்கையை முழுவதையும், அதனுடைய சிறப்பையும் காட்டி விடாது. மாறாக வாழ்வில் நாம் அடுத்த அடியெடுத்து வைக்க சரியான பாதையில் செல்ல வழி காட்டும் என்பதுவே உண்மை.

முதியோரின் உரைகளைப் புறக்கணியாதே. சீராக் 8:9 அறிவை விரும்புவோர் கண்டித்துத் திருத்தப்படுவதை விரும்புவர், கண்டிக்கப்படுவதை வெறுப்போர் அறிவற்ற விலங்குகள் ஆவர். நீதிமொழி 12:1

இளையவர்களின் வளர்ச்சிக்காய் கொடுக்கப்படும் அறிவுரைகள் எல்லாம், அது யாரிடமிருந்து வந்தாலும், உண்மை அன்பு கொண்டதனாலேயே என்பதனை உணர்ந்து ஏற்றுக் கொள்ள முற்படும் போதே வளர்ச்சி உண்டு, வாழ்வும் உண்டு.

அறைதலை அனுமதிக்கின்றார். அலறி அடித்து ஆர்ப்பாட்டம் செய்து, எதிர்த்திடவில்லை. தான் அறையப்படுவது, மனுக்குலத்தின் மீட்புக்காக என்பதனை அறிந்ததாலேயே அமைதியாக அனுமதிக்கின்றார்.

இளையச் சமூகமும் தன் மீது விழும் அறை, தன்னை பக்குவப்படுத்துவற்காகத் தான், தன்னை மெருகூட்டவே என்பதனை உணர்ந்து கொண்டு திருத்தப்பட தன்னை அனுமதித்தால் அளப்பறிய நன்மைகளை பெற்றனுபவிக்கலாம்.

சிலையாக விரும்பும் கல் தன்மீது அடி விழுவதை அனுமதிப்பதில்லையா?

**செபிப்போம்:**

இறைவா நாங்கள் திருத்தப்படுவதற்காகவே தண்டிக்கப்படுகின்றோம் என்பதை உணர்ந்து ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தை எமக்குத் தாரும்.

## பனிரெண்டாம் நிலை

## மரணம்

உம்முடைய மரணம் நல்ல காரியத்திற்காக என்றாலும், வாழ்வு அர்த்தம் பெறுவது நம்முடைய நல்ல செயல்களாலே என்பதனை தான், உம்முடைய மரணம் எங்களுக்கு கற்றுக் கொடுக்கின்றதோ?

வாழ்வு அர்த்தம் பெற வேண்டும். அர்த்தமற்ற வாழ்வு கனிக் கொடா மரம் போல. இதற்காகவே அற்புதமான வாழ்வு பரிசாக தரப்பட்டுள்ளது. கொடையாக பெற்ற உயிர் மூச்சை பேணிக் காத்து, உரியவரிடமே ஒப்புக் கொடுப்பது தான் வாழ்வுக்கான அர்த்தம். இத்தகைய வாழ்வினில் மரணம் தவிர்க்க முடியாத ஒன்று. அந்த மரணத்தை எப்படி எதிர் கொள்வது என்பது இறைவார்த்தையின் ஒளியில் தியானிக்கவே இவரது மரணம் அமைந்துள்ளது.

“என்பொருட்டு வாழ்வை இழப்பவர்கள், அதனை பெற்றுக் கொள்வார்கள்” என்கின்றார். வாழ்வு எந்த நோக்கத்துடனே தனக்கு தரப்பட்டதோ அந்த நோக்கத்திற்காக அர்ப்பணித்து சாவை ஏற்றுக் கொள்கின்றார். எனவே அவர் மரித்தும் உயிர்வாழ்கின்றார் என்பதுவே நம்முடைய நம்பிக்கை.

இளையவர்கள் தங்களது வாழ்வின் நோக்கம் அறிந்து கொண்டு வாழ்வது என்பது அவசியமானது. அந்த நோக்கத்திற்காய் மரணத்தை சந்திக்க நேரிட்டாலும் அதனை துணிவுடனே எதிர் கொள்ளும் மனநிலை பெற வேண்டும்.

அருட்செல்வி ராணி மரியா போன்ற பல பணியாளர்கள் தங்களது குறிக்கோள் அறிந்து தங்களை அர்ப்பணித்தார்கள். அன்னை தெரசா போன்றவர்களும் தன் வாழ்வின் நோக்கம் அறிந்து அத்தனை இடர்பாடுகள் மத்தியிலும் வாழ்ந்தார்கள். இன்றும் பல மறைப்பணியாளர்கள் இறையாட்சியின் நம்பிக்கையில் உறுதியாய் நின்று சான்று பகர்ந்திருக்கிறார்கள் என்பதை அனைவருமே ஏற்றுக் கொள்வோம். வாழ்வை அலட்சியமாய் என்னாமல் அர்த்தமுள்ளதாய் எண்ணி அர்ப்பணமாக்குவோம்.

**செபிப்போம்:**

உம் ஆவியை எமக்குத் தாரும் இயேசுவே. நாங்கள் எங்களை எந்த நோக்கத்திற்காய் படைத்தீர் என்பதனை தெரிந்து எங்களை அர்ப்பணமாக்கிட, அதற்காய் மரணத்தை சந்திக்க நேரிட்டாலும் துணிவுடனே ஒப்புக் கொடுக்க அருள்தாரும்.

## பதிமூன்றாம் நிலை

## தாயின் மடி

மீண்டும் தாயின் மடிக்கு போன நீர், குழந்தையான போது சுமையாக இல்லாமல், சுகமாக இருந்தீர், இப்பொழுது பாரமாக, வேதனையாக மாறிப் போனதின் அர்த்தம் என்ன?

பறவைக்கு இறக்கை சுமையாகிட முடியுமா? மனிதனுக்கு கரங்கள் சுமையாகிட முடியுமா? பிள்ளைகள் பெற்றவர்களுக்கு சுமையாகிட முடியுமா? இல்லை பிள்ளைகளுக்குத் தான் பெற்றவர்கள் சுமையாகிட முடியுமா?

சுமை என்றுத் தானே இன்று தொட்டில் குழந்தைத் திட்டம் கொடி கட்டிப் பறக்கின்றது. அனாதை இல்லங்கள், ஆதரவற்ற இல்லங்கள் தளைத்து வளருகின்றன. முதியோர் இல்லங்களில் தஞ்சம் அடைவோரின் பட்டியல் பெருகி வருகின்றது.

நடைபிணமாக மனிதர்கள் மாறிப் போகின்ற போது, மற்றவர்களை பாரமாகவும், சுமையாகவும், பார்க்க முற்படுகின்ற போது, இத்தகைய நிலை உருவாகின்றது என்பதுவே உண்மை.

இந்த சூழலிலும் எத்தனையோ இளையவர்கள் தங்களது குடும்பத்தினர் வாழ்வுக்காக தங்களை அர்ப்பணித்துக் கொள்வதுண்டு. தங்களது சுக துக்கங்களை மறைத்து நாட்டினர் நலத்துக்காய் தங்களை அர்ப்பணித்துக் கொள்வோரும் உண்டு. தங்களது வயது முதிர்ந்த பெற்றோருக்காக தங்களது இல்லறத்தை தியாகம் செய்வோரும் உண்டு. தன் படிப்பை நிறுத்தி உழைத்து சம்பாதித்து தன் உடன் பிறந்தாரின் எதிர்காலத்தை வளமாக்கியவர்கள் நம்மிடையே உண்டு.

இந்த புவியினில் யாரும் யாருக்கும் சுமையல்ல. பால் குடிக்கும் சேயை தாய் மறப்பாளோ, அப்படியே மறந்தாலும் நான் உன்னை மறக்க மாட்டேன் என்றவரின் வழி மரபினர் நாம். அற்புத தாய் அன்னை மரியாளின் செல்வங்கள் நாம். மரியாள் பாரமாக சுமையாக கருதி தன் மகனை விட்டுச் செல்லவில்லை. இன்றும் நம்மை சுமையாக கருதாமல், நம்முடைய விண்ணப்பங்களை ஏறெடுத்து பரிந்து பேசுகின்ற அன்பு தாயின் மக்கள் நாம் இதனை உணர்வோம்.

**செபிப்போம்:**

இறைவா அன்பு அன்னை மரியாவைப் போல, யாரையும் எவரையும் பாரமாக கருதாமல், வியாகுலங்களை உள்ளத்திழன் ஆழத்தில் இருத்தி சிந்தித்து, உம்மிலே மகிழ்ந்து வாழ வரம் அருளும்.

## பதினான்காம் நிலை

## கல்லறை

நாற்றம் எடுக்கும் கல்லறை வரை உம்முடைய உடலைக் கையளிக்க முற்பட்ட நீர் இன்று நடமாடும் கல்லறையாக மாறிப் போய் இருக்கும் எங்களுக்கு அறிவுறுத்துவது என்ன?

இளையவர்களாகிய நாங்கள், எங்களது வாழ்வை சீர்தூக்கிப் பார்க்க முன்வரும் வேளையிலே எங்களது மனங்கள் இன்று கல்லறைகளாகிப் போனதோ என நினைக்கத் தோன்றுகின்றது. நுகர்வு வெறி இன்று தலைவிரித்தாடுகின்றது. 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என எதைப் பார்த்தாலும் அதனைப் பெற்று விட வேண்டும். அது தேவையா, மிகவும் அவசியமானது தானா? இந்த அளவுக்கு பணம் கொடுத்து பெற எனக்குத் தகுதியுண்டா? இதனால் என்ன தகுதி கூடிப் போகப் போகின்றது என்பது போன்ற எந்த கேள்விக்கும் இடமின்றி, 'பார்த்தேன் பெற்றேன, பயனில்லையா தூக்கியெறி' என்ற எண்ணத்திற்குள் இன்றைய தலைமுறை நாங்கள் பயணிக்கின்றோம்.

மனதினை 'இன்னும், இன்னும்...' என பலவற்றால் கல்லறையாக்கி, பூச்சியும், துருவும் சங்கமிக்கின்ற இடமாக்கி வைத்துள்ளோம். ஆசைகளுக்கு அளவே இல்லை என்ற நிலையில், கட்டுப்பாடுகளை விதைக்காது சேறாக்கி வைத்துள்ளோம். இத்தகைய உணர்வினால் நீர் படைத்து தந்தள்ள இந்த அற்புதமான பிரபஞ்சத்தை குப்பை மேடாக்கி இயற்கையை அழித்து, சிதைத்து வைத்துள்ளோம் என்பதுவே உண்மை.

நாற்றம் எடுக்கும் நீர் குட்டை, மாசுபட்ட காற்று, பசுமையை இழந்த காடுகள், விலங்குகள் இல்லாத சரணாலயங்கள் என்றே இந்த பூமியை எங்களது சுயநலங்களால் மாற்றி கல்லறை மேடாக்கி வைத்துள்ளோம். இதனால் மனங்களும் இன்று சுடுகாட்டைப் போல மயான அமைதியிலே தத்தளிக்கின்றது. உயிர்ப்பு உண்டு என்ற நம்பிக்கையும், தளிர் தோன்றும் என்ற தன்னம்பிக்கையும் எங்களுக்கு வாழ்வு தரட்டும்.

செபிப்போம்:

இறைவா பயணித்தோம் உம்முடைய பாதையின் அடிசுவட்டில். தெளிவு பெற்றவர்களாய், விழுமியங்களை வேராக்கி, ஆழமான விசுவாசத்தால், உம் சீடர்களாய் வாழ உம் ஆவியின் அருளையும், ஆசீரையும் தாரும் இயேசுவே.